## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 38/2020 | Date : 21.12.2022 | DW1 |
|---|---|---|
| Name: இந்திரஜித் | த/பெ.பெருமாள் கவுண்டர் | |
| Evidence Recorded Time: 03.26 P.M. to 03.55 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கில் என் அம்மா தங்கம்மாள் மற்றும் என் சகோதரர் இருவரும் ஆஜராகவில்லை என்றால் சரிதான். நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்றாக தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.117/2020 என்ற வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இந்த வழக்கு வாதி மற்றும் அவரது மகன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள சர்வே எண்.158/1ஏ வாதியின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதி என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்களை தெரிந்து கொண்டேன். வா.சா.ஆ.2 ஆவணமானது 25.02.1971-ல் பாகப்பிரிவினை செய்து பாகபிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு கிரையம் செய்த அலமேலு வாதி செல்லம் பஞ்சநாதம் அவர்களின் சகோதரி என்றால் சரிதான். மேற்படி அலமேலு மற்றும் செல்லம் பஞ்சநாதம் அம்மா பெயர் ராமாயம்மாள், அப்பா ராமலிங்கம் என்றால் சரிதான். எங்களுக்கு கிரையம் கொடுத்த அலமேலு உடன் பிறந்த சகோதரிகள் செல்லம் பஞ்சநாதம், பெரியநாயகி, மங்கையர்கரசி, மாரியம்மாள், கந்தாயம்மாள் என்றால் சரிதான். என் அம்மா பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அசல் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்யாததற்கு காரணம் உள்ளதா என்றால் மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கில் அசல் கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன், அதனால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கிரைய பத்திரத்தை படித்துப்பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பத்திரம் தங்கம்மாள் அலமேலுவிடம் கிரைய வாங்கிய பத்திரத்தின் சான்றிட்ட நகல் (வா.சா.ஆ.4) என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கண்டுள்ள வாசகங்கள் அனைத்தும் சரியானது என்றால் சரிதான். என் தாயார் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதன் சர்வே எண்.158/1 ஆகும், சர்வே எண்.158/1 க்கு பு.ஏ. 3 ஏக்கர் 15 செண்ட், இதில் கிழபுறம் பிரிவினையான பொதுவில் பாதி ஒரு ஏக்கர் 57 1/2 செண்ட் என்றால் சரிதான். எஸ் பெருமாள் பாகத்திற்கு வடக்கு, பெரியண்ண கவுண்டர், பெருமாள் பாகத்திற்கு

நிலத்திற்கு தெற்கு, முத்துகவுண்டர் பாக நிலத்திற்கு மேற்கு, சர்வே எண்.158/1–ல் ராமாயம்மாள் பாக நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பத்திரப்படி ராமாயம்மாளின் பாக நிலத்திற்கு கிழக்கு என்பது வாதியின் தாயார் நிலம் ஆகும். இந்த பத்திரத்திற்கு மூல பத்திரம் 1971–ல் எழுதப்பட்ட வா.சா.ஆ.2 ஆவணமான பாககறார் பத்திரம் என்றால் சரிதான். அலமேலுக்கு பாகம் 1.57 1/2 நிலம் வந்த பிறகு 07.07.1971–ல் விஸ்வநாதனிடம் அலமேலு ரூ.3500/– பெற்றுக்கொண்டு சர்வே எண்.158/1–ல் 3 ஏக்கர் 17 செண்டில் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலத்தை கொதவை வைத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. ஆனால் என் தாயார் பெயரில் உள்ள பத்திரத்தில் கொதவை நீக்கம் செய்யப்பட்டுள்ளது. என்னுடைய பத்திரத்தில் கொதவை நீக்கியதாக உள்ளது என்ன கொதவை வைத்துள்ளது, அதை பொறுத்து எவ்வளவு கொதவை வைத்துள்ளார், எவ்வளவு சொத்து வைத்திருந்தார் என்று பார்த்துவிட்டுதான் அந்த கொதவையை நீக்கி என் தாயார் கியைம் பெற்றுள்ளார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விவரத்தில் பொதுவில் பாதி என்று எழுதப்பட்டடுள்ளது என்றாலும் அதிற்கு சக்குபந்தி இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய கிரைய பத்திரப்படி ராமாயம்மாளுக்கு 1 ஏக்கர் 57 1/2 செண்ட் இருந்தது என்றால் இல்லை. என்னுடைய கிரைய பத்திரப்படி (வா.சா.ஆ.4) 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம்தான் சுவாதீனம் கொடுக்கப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு 29.08.1981–ல் செல்லம்பஞ்சநாதனுக்கு அவருடைய அம்மா செட்டில்மெண்ட் (வா.சா.ஆ 5) எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அதில் சர்வே எண்.158/1–ல் பொதுவில் பாதி 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலம் என்று எழுதியுள்ளது என்றால் சரிதான். என் அம்மா வாங்கிய கிரைய பத்திரத்தில் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலமும், ராமம்மாள் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டெில்மெண்ட் பத்திரத்தில் 1 ஏக்கர் 57 1/2 செண்ட் நிலமும் ஆக மொத்தம் நிலம் 3 ஏக்கர் 15 செண்ட் என்றால் சரிதான்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.